அகர்வால்’ஸ் ஹெல்த் கேர், கண் மருத்துவமனை இணைப்பு

நிறுவனங்களின் இயக்குநர்கள் குழு ஒப்புதல்

■ சென்னை

டாக்டர் அகர்வால்’ஸ் ஹெல்த் கேர் நிறுவனம், டாக்டர் அகர்வால்’ஸ் கண் மருத்துவமனை இணைப்பு திட்டத்துக்கு, அந்நிறுவனங்களின் இயக்குநர்கள் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

டாக்டர் அகர்வால்’ஸ் குழுமத்தின் கீழ் தனித்தனியாக இயங்கி வந்த டாக்டர் அகர்வால்’ஸ் ஹெல்த்கேர் லிமிடெட் நிறுவனம் மற்றும் டாக்டர் அகர்வால்’ஸ் கண் மருத்துவமனை லிமிடெட் ஆகியவற்றின் இயக்குநர்கள் குழு கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் இந்த 2 நிறுவனங்களையும் ஒன்றிணைப்பதற்கான இணைப்புத் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பு இரு நிறுவனங்களின் தொழில் செயல்பாடுகளை ஒற்றை நிறுவனத்தின் கீழ் ஒருங்கிணைக்கும்.

அகர்வால்’ஸ் கண் மருத்துவமனையின் தகுதியான பங்குதாரர்கள் வைத்திருக்கும் ரூ.10 முக மதிப்புள்ள ஒவ்வொரு2 சமபங்குகளுக்கும் பதிலாக, அகர்வால்’ஸ் ஹெல்கேர் நிறுவனம் முழுமையாக செலுத்தப்பட்ட ரூ.1 முக மதிப்புள்ள 23 புதிய சமபங்குகளை வெளியிட்டு ஒதுக்கீடு செய்யும். மேலும், கண் மருத்துவனையின் இயக்குநர்கள் குழு ரூ.70 கோடி மதிப்புள்ள 1.32 லட்சம் சமபங்குகளை முன்னுரிமை பங்குகளாக வெளியிடுவதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது.

இதில் ஒரு பங்கின் வெளியீட்டு விலை ரூ.5,270 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னுரிமை ஒதுக்கீடு, இணைக்கப்பட்ட நிறுவனத்தின் இறுதிப் பொதுப் பங்குதாரர் விகிதத்தில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

இதுகுறித்து, டாக்டர் அகர்வால்’ஸ் ஹெல்த் கேர் லிமிடெட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஆதில் அகர்வால் கூறியதாவது:

இந்த இணைப்பு, எங்கள் குழுமத்தின் பயணத்தில் ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். இந்த ஒருங்கிணைப்பு தொழில் செயல்பாடுகளில் வணிகங்களின் முழு திறனை வெளிக்கொணர உதவும். எளிமையான மற்றும் திறமையான ஒரு குழுமக் கட்டமைப்பை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த நடவடிக்கை, நீண்ட கால அடிப்படையில் எங்கள் பங்குதாரர்களுக்குக் குறிப்பிடத்தக்க மதிப்பை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கடலோர காவல் படை அலுவலகம், பழனிசாமி வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்

அரியலூரை சேர்ந்தவரிடம் தீவிர விசாரணை

■ சென்னை

சென்னை மெரினா, நேப்பியர் பாலம் அருகே உள்ள கடலோர காவல் படை கிழக்கு மண்டல அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு நேற்று முன்தினம் மின்னஞ்சல் ஒன்று வந்தது. அதில், கடலோர காவல் படை அலுவலகத்தில் வெடிகுண்டு வைத்துள்ளதாகவும், அது சற்று நேரத்தில் வெடித்து சிறதும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தகவல் அறிந்த போலீஸார், வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாயுடன் விரைந்து சென்று சோதனை நடத்திய போது சந்தேகப்படும்படியான எந்த பொருட்களும் கண்டெடுக்கப்படவில்லை. இதையடுத்து, மின்னஞ்சல் புரளி என்பது தெரியவந்தது.

இதேபோல், சென்னை ராஜா அண்ணாமலைபுரம் கிரீன்வேஸ் சாலையில் உள்ள அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான பழனிசாமி வீட்டில் வெடிகுண்டு வைத்துள்ளதாக எழும்பூரில் உள்ள மாநில காவல் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு மர்ம நபர் ஒருவர் தெரிவித்தார்.

இதையடுத்து, வெடிகுண்டு நிபுணர்கள் விரைந்து சென்று சோதனை நடத்தினர். ஆனால், வெடிகுண்டுகள் எதுவும் கண்டெடுக்கப்படவில்லை.

இதேபோல, புதுவண்ணாரப்பேட்டை, வஉசி நகர், இளைய முதலி தெருவில் உள்ள இந்திய கடலோர காவல் படையின் பண்டக பணிமனைக்கும் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்தது. அங்கு நடத்தப்பட்ட சோதனையில், அங்கிருந்தும் எந்த வெடி பொருளும் கண்டெடுக்கப்படவில்லை. இது தொடர்பாகவும் போலீஸார் விசாரிக்கின்றனர்.

இதற்கிடையே, பழனிசாமி வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது தொடர்பாக அரியலூரைச் சேர்ந்த பிரகதீஸ்வரர் (40) என்பவரிடம் போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

குடியரசு தலைவர் வருகையை முன்னிட்டு

சென்னையில் செப். 2, 3-ல் ‘ட்ரோன்’ பறக்க தடை

காவல் ஆணையர் அருண் உத்தரவு

■ சென்னை

அரசு முறை பயணமாக, குடியரசு தலைவர் சென்னை வருவதை முன்னிட்டு, செப். 2, 3 ஆகிய இரு தேதிகளிலும், சென்னையில் ட்ரோன் பறக்க தடை விதித்து காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வரும் செப்.2 மற்றும் 3-ம் தேதிகளில் அரசு முறை பயணமாக சென்னை வருகை தர உள்ளார். குறிப்பாக, 2-ம் தேதி மதியம் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்கிறார். 3-ம் தேதி விமானம் மூலம் சென்னையிலிருந்து திருச்சிக்கு புறப்படுகிறார்.

முன்னதாக, 2-ம் தேதி இரவு கிண்டியில் உள்ள ராஜ் பவனில் தங்க உள்ளார். இதையடுத்து, சென்னையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை போலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, சென்னை விமான நிலையம், சென்னை வர்த்தக மையம் (நந்தம்பாக்கம்), ராஜ் பவன் மற்றும் குடியரசு தலைவரின் வாகனம் செல்லும் வழித்தடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த பகுதிகளில் 2 மற்றும் 3 ஆகிய இரு தினங்கள் ட்ரோன் கேமராக்கள் மற்றும் எந்தவிதமான பறக்கும் பொருட்கள் பறக்கவிட தடை விதித்து காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

● விஐடி பல்கலைக்கழக சென்னை வளாகத்தில் தொழில்நிறுவனங்கள் - கல்வி நிறுவனங்களின் கண்டுபிடிப்பாளர்கள் தொடர்பான 2 நாள் மாநாடு நேற்று தொடங்கியது. மாநாட்டில், விஐடி-க்கும் பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கும் இடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. படம்: எம்.முத்துகணேஷ்

சென்னை விஐடி-ல் 2 நாள் மாநாடு தொடக்கம்

கல்வி நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும் இணைந்து செயல்பட வேண்டும்

சர்வதேச வாகன ஆராய்ச்சி மைய இயக்குநர் வலியுறுத்தல்

■ சென்னை

சென்னை வண்டலூரை அடுத்த மேலகோட்டையூரில் அமைந்துள்ள விஐடி பல்கலைக்கழக சென்னை வளாகத்தில் தொழில் நிறுவனங்கள்- கல்வி நிறுவனங்களின் கண்டுபிடிப்பாளர்கள் தொடர்பான 2 நாள் மாநாடு நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில், தலைமை விருந்தினராகப் பங்கேற்ற, சர்வதேச வாகன ஆராய்ச்சி மைய இயக்குநர் ஏ.எஸ்.ராமதாஸ் பேசியதாவது:

பொதுவாகவே கல்வி நிறுவனங்கள் ஒரு திசையிலும், தொழில் நிறுவனங்கள் வேறொரு பாதையிலும் பயணிக்கும். இது தான் நடைமுறை உண்மை. இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் தொழில் நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் இணைந்து செயல்படுகின்றன. தற்போது நம் நாட்டிலும் மாற்றங்களைக் காண முடிகிறது. கல்லூரிகளும், தொழில் நிறுவனங்களும் இணைந்து செயல்படத் தொடங்கியுள்ளன. இவற்றுடன் அரசுத் துறைகளும் இணைந்து செயல்பட்டால் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

நம் நாட்டில் கல்வி நிறுவனங்களில் உருவாக்கப்படும் கண்டுபிடிப்புகளும், தொழில்நுட்பங்களும், காப்புரிமைகளும் வணிக ரீதியிலான உற்பத்தி நிலையை அடைவது மிக குறைவு. இன்றைய சூழலில் தொழில் நிறுவனங்கள் பல்வேறு உலகளாவிய சவால்களை எதிர்கொண்டுள்ளன. வாகன உற்பத்தி துறையில் சிப்புகளுக்கும், மின் வாகன உற்பத்தியில் அரிய வகை காந்தங்கள் மற்றும் செமி-கண்டக்டர்களுக்கும் தட்டுப்பாட்டு உருவாகியுள்ளது. இந்த சவால்களை எதிர்கொள்ள புதுமையான தீர்வுகளை கண்டுபிடிக்க வேண்டியது அவசியம்.

வாகன உற்பத்தி, மின்வாகன உற்பத்தி, பேட்டரி சார்ஜிங் உள்ளிட்ட துறைகளின் மேம்பாட்டுக்கு மத்திய அரசு பல்வேறு திட்டங்களின் கீழ், அதிக மானியங்களை வழங்கி வருகிறது. எனவே, இத்துறையில் உள்ள நிறுவனங்கள் அரசின் மானிய உதவிகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் இவ்வாறு அவர் பேசினார்.

எப்சன் இந்தியா நிறுவனத் தலைவர் சாம்பமூர்த்தி, மஹிந்திரா அண்ட் மஹிந்திரா துணைத் தலைவர் (தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு) வேணுகோபால் சங்கர், இ-பிளான் நிறுவன நிர்வாக இயக்குநர் உமேஷ் பையூஜி எலெக்ட்ரிக் நிறுவன தலைமை வர்த்தக அலுவலர் பழனிசாமி லட்சுமன், இந்திய தர மேலாண்மை மன்றத் தலைவர் டி.கலைச்செல்வன் ஆகியோர், தற்போதைய சூழலில் புதுமை கண்டுபிடிப்புகளின் அவசியத்தை எடுத்துரைத்தனர்.

தொடர்ந்து, கல்வி, ஆராய்ச்சி, திறன் மேம்பாடு தொடர்பாக சென்னை விஐடி-க்கும் இ-பிளான், எப்சன் இந்தியா, இந்திய தர மேலாண்மை மன்றம், ஃபோர்ட்டினெட், டிவிஎஸ் சப்ளை செயின் சொல்யூஷன் உள்ளிட்ட 7 நிறுவனங்களுக்கும் இடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

முன்னதாக, விஐடி இணை துணைவேந்தர் டி.தியாகராஜன் வரவேற்றார். டீன் ஆர். சிவக்குமார் அறிமுக உரையாற்றினார். துணைவேந்தர் வி.எஸ். காஞ்சனா பாஸ்கரன் வாழ்த்திப் பேசினார். உதவி டீன் அபிராமி நன்றி கூறினார். இந்த மாநாடு இன்றும் (ஆக. 29) நடைபெறுகிறது.

தங்கம் பவுனுக்கு ரூ.120 உயர்வு

■ சென்னை

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப, தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகின்றன. கடந்த சில நாட்களாக உயர்ந்து வந்தது.

இதன் தொடர்ச்சியாக, சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று பவுனுக்கு ரூ.120 உயர்ந்து, ரூ.75,240-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.15 உயர்ந்து, ரூ.9,405-க்கு விற்கப்பட்டது. 24 காரட் சுத்த தங்கம் ரூ.82,080-க்கு விற்கப்பட்டது.

அதே நேரத்தில், வெள்ளி விலையில் மாற்றமின்றி, ஒரு கிராம் வெள்ளி ரூ.130 ஆகவும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.1.30 லட்சமாகவும் இருந்தது.

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
பதிவு அலுவலகம் : 67, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032. தொலைபேசி : 044 – 22354430
அலகு – 1 : காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு. தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்)

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
252613 003830	TNPL அலகு-I காகிதபுரம், கரூர் மாவட்டம் மற்றும் அலகு - 2 மொண்டிப்பட்டி, திருச்சி மாவட்டம் ஆகியவற்றுக்கு தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து இறக்குமதியாகும், காகிதக்கூழ் / ரசாயனங்கள் அடங்கிய கண்டெய்னர்களை சுங்க அனுமதி பெற்று & போக்குவரத்து மூலம் எடுத்து வருதல் / காலி கண்டெய்னர்களை திருப்பி அனுப்புதல்.	15.09.2025
252613 003806	2025-26 ஆண்டில் காகிதபுரம் TNPL அலகு-I ல் பலவேறு சிறு பணிகளை மேற்கொள்ள ஆட்களை வழங்குதல்.	12.09.2025

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டும் வெளியிடப்படும். மேலும் விபரங்களுக்கு www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app இணையதளங்களை பார்வையிடவும்.
செ.ம.தொ.இ/4663/ஒப்பந்தப்புள்ளி/2025 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

ஏ.1142 K.வெள்ளாகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்
மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு
2024-2025 ஆம் ஆண்டு மாவியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மதுரை மாவட்டம், கள்ளிக்குடி தாலுகா, ஏ.1142 K.வெள்ளாகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 1000 மெட்ரிக் டன் கிடங்கு கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை, ந.க.எண்.287/2024/கிக1, நாள்.12.08.2024ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட வேலையினை செய்து முடிக்க பொதுப்பணித்துறை முதல் வகுப்பு ஒப்பந்ததாரரிடமிருந்து டெண்டர் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வ.எண்.	வேலையின் பெயர்	வைப்புத்தொகை ரூ.	வேலை மதிப்பீடு ரூ. இலட்சத்தில்
1	1000 மெட்ரிக் டன் கிடங்கு கட்டுதல்	4,56,250/-	182.50 (GST உட்பட)

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் - 28.08.2025
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள் - 15.09.2025, முற்பகல் 10.00 மணி
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் - 15.09.2025, பிற்பகல் 5.00 மணி
செயலாளர் (பொறுப்பு)

KHAZANCHI JEWELLERS
KHAZANCHI JEWELLERS LIMITED
(Formerly known as Khazanchi Jewllers Private Limited)
Regd. Office : No.130, NSC Bose Road, Sowcarpet, Chennai - 600079
CIN: L36911TN1996PLC034918 | Website: www.khazanchi.co.in

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

(1) அறிவிப்பு – இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 25.09.2023 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 09/2023ன் படியும் நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சகத்தின் (MCA) 05.05.2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 20/2020 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதன்படியும் செபி அமைப்பால் வெளியிடப்பட்ட 07.10.2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFD–PoD–2/2/P/CIR/2023/167-ன் படியும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய செபி அமைப்பின் 11.07.2023 தேதியிட்ட மைய சுற்றறிக்கையின் படியும் (இதன் பின்னர் கூட்டாக சுற்றறிக்கைகள் என்று குறிப்பிடப்படும்) மேலும் நிறுவனங்கள் சட்டம் 2013ன் கூறுகளின்படியும் அங்கு உள்ள விதிகளின்படியும், நிறுவனத்தின் வருடாந்திர பொதுக் கூட்டமானது, காணொளிக் காட்சி/பிற ஒலி ஒளி சாதனங்கள் (VC/ OAVM) வாயிலாக, செப்டம்பர் 22, 2025 (திங்கட் கிழமை) தேதியன்று மதியம் 01.00 மணியளவில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.
(2) மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் செபி அமைப்பின் சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 தேதி 13.05.2022 மற்றும் SEBI/HO/CFD/PoD-2/CIR/2023/4 தேதி 05.01.2023 ஆகியவற்றுக்கு இணங்கவும், நிறுவனமானது, தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனத்துடனும் என்எஸ்டிஎல் உடனும் சிடிஎஸ்எல் உடனும் டெபாசிட்டரிகள் என்று குறிப்பிடப்படுபவை) பதிவு செய்து கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு ஆண்டு அறிக்கையுடன் கூடிய வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு, மின்னணு வடிவில் அனுப்பி வைக்கப்படும்.
(3) 2024-25 நிதி ஆண்டுக்குரிய நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையைக் கொண்ட வருடாந்திரப் பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு, நிறுவனத்தின் www.khazanchi.co.in இணையதளத்திலும் பங்குச்சந்தையின் www.bsseindia.com இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
(4) வருடாந்திர பொதுக் கூட்ட தருணத்தில், வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்களுக்கும் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் வாக்குகளை அளிக்க ஏதுவாக, நிறுவனமானது, தொலைநிலை மின்–வாக்களிப்பு வசதி, மின்–வாக்களிப்பு வசதி இரண்டையும் வழங்கிடும்.
(5) தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை இது வரை பதிவு செய்து கொள்ளாதவர்கள், சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளர்களை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
(6) டிசிஎஸ் அல்லது அனுமதிக்கப்பட்ட வேறு வழிமுறைகளில், ஈவுத் தொகைகளை (டிவிடன்ட்) நேரடியாக தங்கள் வங்கி கணக்குக்கு பெற்றிட உறுப்பினர்கள், வங்கி பற்றிய கட்டாய பதிவான பேங்க் மேன்டேட் புதிதுப்படுத்துதல் என்பதற்காக, ISR–1 படிவத்தை நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி investors@khazanchi.co.inக்கு பின்வரும் ஆவணங்களுடன் கூடியதாக சமர்பிக்க வேண்டும் அல்லது வாரிசுதாரர் – உறுப்பினரின் பெயர் அச்சிடப்பட்டதான ஒரிஜனல் ரத்து செய்யப்பட்ட காசோலை, வங்கி பாஸ் புக் அல்லது வங்கியினரால் கையொப்பமிடப்பட்ட வங்கி கணக்கு விவரம், அல்லது RTA முதலீட்டாளர் சேவை வலைதளம் investors@khazanchi.co.inல் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
(7) வருடாந்திரப் பொதுக் கூட்டத்தில் தொலைநிலை மின்–வாக்களிப்பு, மின்–வாக்களிப்பு குறித்த விரிவான நடைமுறைகள் விவரங்களும் காணொளிக் காட்சி/பிற ஒலி ஒளி சாதனங்கள் வாயிலாக, வருடாந்திரப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான விதிமுறைகளும் வருடாந்திரப் பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

கழஞ்சி ஜுவல்லர்ஸ் லிமிடெட்–க்காக
சாக்ஷி ஜெயின்
நிறுவன செயலர்
இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 29, 2025

தமிழ்நாடு அரசு
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மதுரை மாவட்டம்.
Capital Grand Fund (Savings) 2025-26 (மின் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு)
சாலை மேம்பாடு பணிகள்
1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in. இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநரால் Capital Grand Fund (Savings) திட்டத்தில் சாலை மேம்பாடு பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. (தொகுப்பு வாரியாக)
3. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை www.tntenders.gov.in. என்ற இணைய தள முகவரியில், இலவசமாக 29.08.2025 முதல் 12.09.2025 வரையிலான காலத்தில் எடுத்துக்கொள்ளலாம்.
4. நேரம் மற்றும் நாள்
i) மின் ஒப்பந்தப்புள்ளிகள் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 12.09.2025 மாலை 3.00 மணி வரை
ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 12.09.2025 மாலை 4.00 மணி முதல்
இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மா.ஊ.வ. முகமை., மதுரை.
செ.ம.தொ.இ./4743/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க&ப) வட்டம் திருச்சி–1.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.22 க.பொ /கட்டட(க&ப) வட்டம் / 2025–26 / திருச்சி–1/ நாள் : 26.08.2025
முன்தகுதி விண்ணப்பம் மற்றும் விரிவான இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (இரு உறை முறை) ஒப்பந்த வகை: ஒட்டு மொத்தம்
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்ட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருச்சி–1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்.	பணியின் பெயர்	பணியின் நோராய மதிப்பு (ரூபாய் லட்சத்தில்)	முன்வைப்புத் தொகை	ஒப்பந்தக் காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு
1.	திருச்சி மாவட்டத்தில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை மற்றும் முது கலை மாணவியர்களுக்கான கூடுதல் மகளிர் விடுதி கட்டும் பணி.	ரூ.1,645.51	ரூ8,32,800/–	16 மாதங்கள்	வகுப்பு I மற்றும் அதற்கு மேல்

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 29.08.2025 முதல் 29.09.2025 மாலை 3.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 29.09.2025 மாலை 03.00 மணி வரை
4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 30.09.2025 மாலை 3.30 மணி முதல்.
5. மேலும் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின்: https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிவிக்கப்படும்.
6. தள ஆய்வு சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பம் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படும் 4 (நான்கு) நாட்களுக்கு முன்னர் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அவர்களை சென்றடைய வேண்டும்.
7. தள ஆய்வு சான்றிதழ் பெற சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அல்லது இணை அதிகாரிகளுடன் சென்று தள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. தள ஆய்வு சான்றிதழ் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் கடைசி தேதிக்கு ஒரு நாள் முன்பு வரை சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (க&ப) வட்டம், திருச்சி –1.
செ.ம.தொ.இ/4727/ஒப்பந்தப்புள்ளி/2025

அரசியல், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
press.release@hindutamil.co.in

Canara Bank கனரா வங்கி
திருத்தணி கிளை (DPC: 3799)
எண்.97/2B, சித்தூர் ரோடு, திருத்தணி- 631 209.
Ph: 044-2794 5255,
Mob: 63743 77285 Email: cb3799@canarabank.com
அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு
[SECTION 13(4)] ANNEXURE – 10
பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Act 54 of 2002) (hereinafter referred to as "the Act") மற்றும் விதி 3ன்படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் கனரா வங்கியின் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12)-ன் கீழ், **கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு 17.06.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் கடன்தொகையை திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.**
கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8 & 9ன் படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக உடைமையாக்கியுள்ளார்.**
கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).
இது முதற்கொண்டு கடன்தாரர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது கனரா வங்கி, திருத்தணி கிளைக்கு வர வேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.**
வ.எண்.1: கடன்தாரர்கள்: Shri.ராஜேந்திரன், S/o.முருகன், **Shri.R.ஜெகதீசன்**, S/o.M.ராஜேந்திரன், **Shri.R.சீனிவாசன்**, S/o.M.ராஜேந்திரன், **Smt.தாட்சாயணி**, D/o.ராஜேந்திரன், W/o.கோபி, **அனைவரது முகவரி:** 2/96, மேட்டு தெரு, அம்பேத்கர் நகர், நெமிலி கிராமம், திருத்தணி, திருவள்ளூர்-631201. **Smt.சுமதி** D/o.ராஜேந்திரன், W/o.திருமலையா, பட்சிகுண்டா கங்காஜுநல்லூர் மண்டல், சித்தூர் மாவட்டம், ஆந்திரபிரதேசம்-517421. **Smt.ஹரிதா** D/o.ராஜேந்திரன், W/o.வேலாயுதம், கனகம்பாளையம் கிராமம், புத்தூர் மண்டல், சித்தூர் மாவட்டம், ஆந்திர பிரதேசம்-517583; **கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 31.07.2025 அன்றுள்ளபடி ₹3,84,406.09** மற்றும் வட்டி, இதர செலவுகள். **சுவாதீனம் எடுத்த தேதி: 26.08.2025**
அசையா சொத்து விவரம்: சொத்தின் மூலப்பத்திரதாரர் பெயர்கள்: 1.ராஜேந்திரன் M, 2.ஜெகதீசன் R, 3.சீனிவாசன் R, 4.சுமதி T, 5.தாட்சாயணி G, 6.ஹரிதா V
காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருத்தணி சார் பதிவு மாவட்டம் மற்றும் நெமிலி கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட புஞ்சை சர்வே எண். 101/3 பரப்பு 0.05.5 ஹெக்டேர் (13-58 சென்ட்) நத்தமாக மாற்றப்பட்டு சர்வே எண். 101/12, எண்.31, நெமிலி கிராம கணக்கு, திருத்தணி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 5921 சதுர அடி அல்லது 550 சதுர மீட்டர் நிலம், **இதில் தரைத்தளம் மற்றும